19 வது பெருநகர குற்றவியல் நீதிமன்றம்,
எழும்பூர் @ அல்லிக்குளம், சென்னை – 3.

தேதி 27.01.2026

| | | |
|---|---|---|
| சுருக்கு வழக்கு எண் | – 13300/2023 | |
| வாதி/எதிரி/நீதிமன்ற தரப்பு | – | எ.த.சா. 1 |
| பெயர் | – | உமாராணி |
| கணவர் பெயர் | – | மகேஷ் |
| வயது | – | 50 |

1873–ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டம் 10–வது வகையங்கள்படி இன்று 27.01.2026 நான் திருமதி. லஷ்மி இளநிலை உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதிமொழி கூறப்பட்டு சாட்சியம் அளிக்கப்படுகிறது. சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை ( புகார்தாரர் ஆஜர் . புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சியம் எடுக்க ஆட்சேபணை இல்லை என புகார்தாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

1. புகார்தாரர் எனக்கு 25 ஆண்டுகளாக எனக்கு தெரியும். 2022 ஆம் வருடம் நவம்பர் மாதத்தில் என்னுடைய தொழிலுக்காக பணம் புகார்தாரரிடம் கேட்டேன். அவர் ரூ. 1 லட்சம் ரு. 1 லட்சமாக நான்கு முறை மொத்தம் ரு. 4 லட்சம் கொடுத்திருந்தார். நான் அவரிடம் ரூ. 5 லட்சம் கடன் கேட்டிருந்தேன். கடைசியாக அவர் கடன் கொடுக்கும்போது ரூ. 15,000/– பிடித்துக்கொண்டு ரூ. 85,000/– கடன் கொடுத்தார். மொத்தம் அவர் ரூ.4,85,000/–கடன் கொடுத்திருந்தார். நான் புகார்தாரர் ஒவ்வொரு முறை பணம் கொடுக்கும்போது என்னுடைய நிரப்பபடாத காசோலை ஒன்றினை கொடுத்துதான் கடன் வாங்கினேன். அந்த காசோலையை

Surety –க்காகதான் நிரப்பாமல் கொடுத்திருந்தேன். கடனுறுதி சீட்டு ஒன்றும் நிரப்பாமல் என் கணவர் கையொப்பம் செய்து கொடுத்துள்ளார். கடைசியாக ரூ. 85,000/– கொடுக்கும்போது நிரப்பபடாத வெள்ளை தாளில் என்னிடமும் என் கணவரிடமும் கையொப்பம் வாங்கிக் கொண்டார். ஒவ்வொரு முறை கடன் கொடுக்கும்போது என் கணவர் கையொப்பம் இட்ட நிரப்பபடாத கடனுறுதி சீட்டும் கொடுத்துள்ளேன்.

2. நான் ஜனவரி 2023 முதல் ஜீன் 2023 வரை வங்கி மூலம் ரூ. 77,000/– புகார்தாரருக்கு அனுப்பியுள்ளேன். ஜீன் 2023 ஆம் வருடம் புகார்தாரர் பணத்தை திரும்ப கேட்டார். அப்போது நான் தொழிலில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்று ரூ. 50,000/– ரொக்கமாக புகார்தாரரிடம் கொடுத்தேன். நான் வாங்கிய ரூ. 4,85,000/– ல் ரூ. 1,27,000/– திரும்ப கொடுத்துவிட்டேன். நான் அவருக்கு ரூ. 3,58,000/– தான் தரவேண்டியுள்ளது. நான் வருமானம் இல்லை என்று அவகாசம் கேட்டிருந்தேன். ஆனால் புகார்தாரர் அதைகேட்காமல் என் மீது ரூ. 5,00,000/– ற்கு பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதனால் இந்த வழக்கில் இருந்து என்னை விடுவிக்கவேண்டும். என்னுடைய Axis வங்கி வில்லிவாக்கம் கிளையின் 01.01.2023 முதல் 30.06.2023 வரையிலான **வங்கி கணக்கு பட்டியல் எதசாஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**( புகார்தாரர் வேண்டுகோளிற்கினங்க வழக்கு வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**

**திறந்த நீதிமன்றத்தில் என்னால் பதிவு செய்யப்பட்டு எதிரி முன்னிலையில் சாட்சிக்கு படித்து காட்டி சரி என்று அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது,**

XIX Metropolitan Magistrate,
Egmore @ Allikulam, Chennai-03.